போகக் கூடாது என்று எண்ணி போயிருக்கமாட்டார்கள். அவர்கள், இங்கு வந்து வேண்டுமென்றே சொல்கிறார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, (குறுக்கீடுகள்) போதும். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அனைத்தும் பேசிவிட்டார்கள். அதுகுறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் விளக்கமும் அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் அதிகாரிகளுக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையான அழைப்பை அளித்து விழாக்களை நடத்த வேண்டும் என்ற உத்தரவினை வழங்க வேண்டும் என்று நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சம்பந்தமாக வேண்டாம். (குறுக்கீடுகள்) வேண்டாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாகப் போதும். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக நிறைய விவாதித்துவிட்டோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2019 ஜூலை 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) கன்னியாகுமரி மாவட்டம், சூறாவளிக் காற்றிலிருந்து கடற்கரைக் கிராமங்களைப் பாதுகாத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பத் திரும்ப (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் இதே பொருள் குறித்துப் பேசினால், அவையில் நாம் எவ்வளவு நேரம் அதைப் பற்றி விவாதிப்பது? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் இது சம்பந்தமாகத்தான் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் இன்று காலையிலேயே என்னிடத்தில் பேசினார். அதனால், அவருக்கு நான் அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) உங்களது பிரச்சினை என்ன? (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தில் 48 கடற்கரைக் கிராமங்கள் உள்ளன. 50 கி.மீ. வேகத்தில் வேகமான சூறாவளிக் காற்று அடித்துக்கொண்டிருக்கின்றது. இதுகுறித்த செய்தி தற்போது டி.வி-யில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் அனைவரும் எப்படி வாழ்வது, எப்படி தப்பிப்பது என்ற பதட்டத்தில் உள்ளனர். வீடுகள் அனைத்தும் சேதமடைந்து கொண்டிருக்கின்றன. இது முக்கியமான பிரச்சினை. இதற்குத் தகுந்த பாதுகாப்பு கொடுப்பதற்காகத்தான் நான் இந்த அவையில்* raise *செய்கிறேன். இதனை உங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். முக்கியமாக குளச்சல், தேங்காய்ப்பட்டினம், முட்டம், கடியப்பட்டினம்,*